தடுப்பதற்கு வடிகால் திட்டம் ஒன்று இருக்கிறது. அதை விரைவில் அமல் செய்து இந்தக் கொள்ளிடத்தில் கீழ்ப் பகுதியிலே காவேரியில் ஏற்படும் வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகின்ற அந்த ஆய்வுப் பணிகள் முடியும் தறுவாயிலே இருக்கின்றன.

பெரியகோம்பை பகுதியிலுள்ள ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 170—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) ராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை பகுதியிலுள்ள பிரபஞ்சோலை அருகிலுள்ள பெரியகோம்பை பகுதியில் உள்ள ஆற்றின் குறுக்கே அணை கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட இடத்தில் அணை கட்டும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது பூர்வாங்க ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த ஆய்வு முடிந்தவுடன் மேல் நடவடிக்கை தலைமைப் பொறியாளரால் எடுக்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூர்வாங்க ஆய்வு, அதாவது பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் விரைவாக முடிக்கப்பட்டு, மதிப்பீடு விரைவாகத் தயாரிக்கப்பட்டு இந்த அணை கட்டும் பணி விரைவாகத் தொடங்கப் படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இப்பொழுது நடந்து வருகின்ற இந்த ஆய்வுப் பணிகளை விரைவில் முடிக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 7]

பாபநாசம் அருகே கோரையாற்றில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண். 171—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையில் உள்ள பாபநாசம் பக்கம் கோரையாற்றில் ஒரு அணை கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

(இ) திட்ட மதிப்பீடு என்ன?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): இத் திட்டம் தலைமைப் பொறியாளரின் முன்னோடி ஆய்வில் உள்ளது. முன்னோடி ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் திட்டத்தை எடுத்துக் கொள்ள சாத்தியக் கூறுகள் இருக்குமானால், திட்டம் விரிவான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆற்றிலிருந்து வரும் தண்ணீர், குறிப்பாக மழை நேரங்களில் வெள்ளப் பெருக்கெடுத்து, கடலில் வீணாகக் கலக்கும் அபாயம் இருப்பதால், இதற்கு விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டு, சீக்கிரமாக இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து, அணை கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே எப்படியாவது ஒரு அணையைக் கட்டவேண்டும் என்பதிலே அரசு அக்கறையாக இருக்கிறது. அதன் காரணமாக அந்த முன்னோடி ஆய்வுத் திட்டம் நடத்துகின்றபோது அதற்காக எவ்வளவு மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்பதை எல்லாம் நாம் அவர்களைச் செய்யச் சொல்லி இருக்கின்றோம். அந்த அடிப்படையில் கிட்டத்தட்ட திட்டத்தின் உத்தேச மதிப்பு 811 லட்சம் என்றும், தேக்க அளவு 725 மில்லியன் கன அடி நீர் தேக்கி வைக்கப்படலாம் என்றும், இதனால் 8,246 ஏக்கர்கள் புதிய நஞ்சை நிலங்கள் பயன்பெறும் என்றும், அதிகமாக 8,100 டன் உணவு உற்பத்தி கிடைக்கும் என்றும் சொல்லப்

பட்டிருக்கிறது. இதன் முன்னோடி ஆய்விலே ஒரு புதிய முறையைச் சேர்த்திருக்கிறோம். காரணம் இன்னொரு ஆய்வு செய்வதைத் தவிர்ப்பதற்காக அந்த அடிப்படையில் அதை எடுத்துக் கொள்கின்ற வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன என்றுதான் கருதுகிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய பயனைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதையும், மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முன்னோடி ஆய்விலேயே, முடிந்த ஆய்வாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 8 கோடியே 11 லட்சம் செலவாகும் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கின்றது விரிவான அறிக்கையைப் பெற்று நிச்சயமாக அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் பொதுவாகவே ஆய்வு செய்கின்ற காலங்களிலே 3 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையில் நீடித்துக் கொண்டே போகிறார்கள். இந்த ஆய்வு செய்யும் காலத்தினைக் குறைத்து உடனடியாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மேற்பரப்பு நீரை, சர்பேஸ் வாட்டர், நாம் அதிகமாகவே பயன்படுத்தி வருகிறோம். எனவே அணைகளைக் கட்டுகின்றபோது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனுடைய நீர் வரத்தை நீரியல் அடிப்படையிலே கணக்கிடக் கடமைப் பட்டிருக்கிறோம். அதனால் சில பகுதிகளில் 3 ஆண்டுகள்—அதற்கு மேலும் ஆகின்றது. கூடுதலாக எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பார்த்த பிறகு, மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள், என்று ஆகின்றன. இப்போது அம்பாசமுத்திரம் வட்டம் பாபனாசம் அருகில் கோரையாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, அது முதல் நிலை ஆய்வாக இருந்தாலும்கூட, முடிந்த பணியாக அதை மனதிலே கொண்டு செயல்பட வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை மூலமாக அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 3 ஆண்டுகளில் முடிய வேண்டிய இந்த வேலையை 6 மாதங்களுக்குள்ளாகவே இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே முடித்திருக்கிறார்கள். இடத்தைப் பொறுத்தும் சூழ்நிலையைப் பொறுத்தும் அரசு அவ்வப்போது விரைவான நடவடிக்கையை எடுத்து வருகிறது.